தமிழ்ப் பொழில்

10

ஜனவரி - பிப்ரவரி, 1926

JL
ஈ211,N2558
N26-1.10
209098

உ

தமிழ்ப்பொழில்

20 MAR 1926

தஞ்சை,
கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினின்று வரும்
இனிய செந்தமிழ்த் திங்கள்வெளியீடு.

ணர். க. | துரோதன-தை 1926, சனவரி-பிப்ரவரி.) | மலர். கo,

1422

க. தமிழ்ப் பல்கலைக் கழகம். 345.

உ. தமிழ்ப் புலவருக்கு மாநிலவளாக அறிவு. 347.

ங. ஆளுடைய நம்பிகள் திருப்பாட்டு. 353.

ச. நக்கீரர். 362.

ரு. தமிழ்த்தாய் வாழ்த்து 369.

சு. கலிங்கத்துப் பரணியாராய்ச்சி விளக்கம். 370.

எ. புகழுடம்பு பெற்றவர். 372.

அ. ஓரி. 376.

கூ. இந்தியத்தாய் தன் மக்கட்கு உரைப்பது. 380

கo. சங்கக்காலத்துச் சோழவரசர் பரம்பரை. 382.

இதழாசிரியர்,
R. வேங்கடாசலம்பிள்ளை.

பூர்ணசந்த்ர அச்சுக்கூடம், தஞ்சாவூர்.

கட்டுரை எழுதிய திருவாளர்கள்.

க. இதழாசிரியர்.
உ. அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள், தமிழ் வ... யாளர், அரசியலார் கல்லூரி, கோயமுத்தூ...
ங. ரு. வீ. உலக ஊழியரவர்கள், பண்டிதர், கர... தமிழ்ச்சங்கம் தஞ்சை.
ச. மு. கோவிந்தராச நாட்டாரவர்கள், B. A., L. T., தலைமை ஆசிரியர், போர்டு பாடசாலை, அரசர்மடம்.
ரு. பண்டிதர். அ. கோபாலையர் அவர்கள், தமிழ் விரிவுரையாளர், அடையாற்றுக் கல்லூரி, சென்னை.
சா. சாமி. சிதம்பரன் அவர்கள், பண்டிதர், உரத்தநாடு.
எ. T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள், தலைமைப் பண்டிதர், வாணுதுறை உயர்பள்ளிக்கூடம், கும்பகோணம்.
அ. T. V. இரத்தனசாமி பிள்ளையவர்கள், பள்ளிக்கூட மேற்பார்வையாளர், கரந்தை.
கO. திரு. சோமசுந்தரதேசிகரவர்கள், (இலக்கண விளக்க பாம்பரை) பண்டிதர், நன்னிலம்.

பிழை, திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை	திருத்தம்.
338.	6.	கருத்து.	என் கருத்து.
339.	19.	சொற்றொடரிற்கண்ட	என் சொற்றொடரிற் கண்ட
341.	13-14.	கள்ளியைத் தொடர நின்ற கருங்கொடி.	கருங்கொடி தொடர நின்ற கள்ளி.
346.	27.	ஆவவே	ஆகவே.
347.	4.	துண்டு	துண்டு வெளியீடுகள்,
350.	26.	பொருட்டும்	பொருட்கும்
352.	16.	பதிபரிசுரைதத	பதிபரிசுரைத்த
358.	25.	விக்கின்றது.	விளைவிக்கின்றது.
361.	6.	விழித்தாற்	விழித்தாறு.
367.	22.	முன்ளது	முள்ளது.

பனிக்கால விரிவுரைகள்.

குரோதன தை, உரு (7-2-26) ஞாயிறன்று, சங்கம் கல்லூரிக் கொட்டகையில் மாலை உ௳ நாழிகைக்கு ஒரு பொதுக் கூட்டம் கூடியது. திருவாளர். க. நடராசன், பி. எ., பி. எல். அவர்கள் தலைமை தாங்கினர். தஞ்சை ஆசிரியர் ப... கல்லூரியின் தமிழாசிரியர் திருவாளர் சிதம்பர ஐயரவர்க...: ராமாயணம் குகப்படலத்தை இனிமையாக எடுத்துரைத்தனர்.

உ

தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர் : க. குரோதன-தை. மலர்: கO

உ

தமிழ்ப் பல்கலைக் கழகம்.

தமிழ்மொழியின் நலம்பேணும் ஒரு பல்கலைக்கழகம் நிறுவினாலன்றித் தமிழ்மொழியின் புறக்கணிப்பும், தமிழர்களின் கலைத்தடையும் ஒழியா வென்பதுணர்ந்த உண்மைத் தமிழன்பர் சிலர் ‘தமிழ்ப் பல்கலைக் கழகம்’ ஒன்று நிறுவுவதற்குச் சில திங்களாக அரிதின் முயன்று வருகின்றனர். இம்முயற்சியின் பயனாக இதுகாறும் தஞ்சையிலும் திருச்சிராப்பள்ளியிலும் இரண்டு மாநாடுகள் கூட்டப்பெற்றுள. தஞ்சைக் கூட்டநிகழ்ச்சி முன்னரே அறிந்தன.

திருச்சிராப்பள்ளியில் தை, கO-ஆம் நாள், (23—1—26) ஆன்றமைந்தடங்கிய கொள்கைச் சான்றோராகிய தமிழ் நாட்டமைச்சர் மாண்புமிக்க சர் தி. நே. சிவஞானம் பிள்ளையவர்கள் B. A.; M. L. C. தலைமையில் ஒரு கூட்டம் நிகழ்ந்தது ஈண்டுக் குறித்தற்குரியது. எதிர்பார்த்திருந்த உண்மைத் தமிழன்பர் சிலர் வரவின்றிலர்; எதிர்பாராத வேறு சிலரும் வந்திருந்தனர். இந்நிலையிலும் கூட்டம் செவ்விதில் நடைபெற்றிருத்தலின், அமைச்சரின் வினைவலதிறனும், தமிழ்த்தாயின் திருவருட்பெருக்கும் நன்கு வெளிப்பட்டன.

அவைத்தலைவரவர்களது முன்னுரை ஆழ்ந்த கருத்தும் முதிர்ந்த பழக்கமும், பொருந்தும் பொருளுமே யுடையவாகி மிளிர்கின்றன. **கல்வியமைச்சருள்ளிட்ட** பல்லோரையும் கவலச் செய்திருக்கும் **பொருள் ஈட்டும்நெறியில்,** நமது தமிழ் அமைச்சர், தமிழர்கட்குரிய இயற்கைவீரம் உடையராய்த், தமிழ் நாட்டுப் பெருஞ் செல்வர்களையும், மடங்களின் தலைவர்களையும், நாட்டாண்மை நகராண்மைக் கழகங்களையும் மனங்கொண்டு, வேண்டும் பொருளை எளிதில் ஈட்டி விடலாமெனக் கருதுவது போற்றத்தகுவதே.

நகர வணிகப் பெருந்திருவினராகிய **சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள்** தாம் ஒருவராயே சில கல்லூரிகள் வைத்து நடாத்தி வருகின்றார்கள். இவரனைய தவமக்கள் பலரை நம் தமிழ்த்தாய் பெற்று விளங்கலின், தமிழர் பொருளீட்டு நெறிக் கஞ்சித் தாம்கொண்ட பெருந்தொண்டினைக் கைவிட்டொழிதல் எஞ்ஞான்று மில்லை. பெருந்திருவினர் ஒருபாலிருக்க, கோடிக் கணக்கினராய தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் சிறு சிறு தொகை யுதவினும் பெருவெள்ளமாமன்றே!

ஆயினும் ஒன்று. இப்பெருந்தொண்டில் முன்னின்று உழைக்கும் தொண்டர்கள் இதுகாலை மிகச்சிலரே. 'இவ்வுண்மைத் தொண்டர்கள்' இன்னும் பற்பலரைத் தங்களுடன் சேர்த்து, மிக மிக விரிவாக, நாட்டினர்க்குப் பல்கலைக் கழக நிகழ்ச்சியை எடுத்துரைத்துக் கிளர்ச்சியுண்டாக்கும் கடப்பாடுடையர். கற்றறிஞராய சிற்சிலரை யன்றி ஏனோராகிய பல்லோருக்குப் பல்கலைக்கழக மென்பது யாதெனவே உணர்வரிது. தனிப் பல்கலைக்கழக அமைப்பில் மனமுவந்து பெரும்பொருள் உதவும் பலர் இக்கூறியோர் பாங்கில் அமைந்துள்ளார்கள். ஆவவே, முதன்முதற் செய்யக் கிடப்பது விரிவான எடுத்துரைப்பே யாகும். இப்போதுள்ள கலைபயில்முறையில் உள்ள காலநெடுமையும், மயக்க வுணர்ச்சியும், பிற்பயன் அளியாமையும், வயிற்றுப் பிழைப்பிற்கேன்றே கற்றும் அதுதானும் கிட்டா ஏமாற்றமும். பிறவும் எடுத்துரைத்தும், இப்போது நாடும் பல்கலைக் கழகத்

209078

தால் இக்குறைகள் நீங்கும் நெறியையும், எய்தும் நாட்டின் பொது முன்னேற்றத்தையும் வகுத்துரைத்தும் செல்லும் துண்டு விரிவுரைகள் முகலியவற்றால் நாட்டினைத்துயிலெழுப்பி, கருதிய அலுவலை முற்றுவிக்க நமது அமைச்சர் முதலியோரை வேண்டிக் கொள்ளுகின்றோம். பல்கலைக் கழகம் நாட்டுவது குறித்து உழைப்பதற்கே ஒரு **வாரஇதழ்** அல்லது **திங்களிதழ்** தோன்றுவதும் மிகையாகாது. இவ்விதழும் இயன்றனவெலாம் செய்யும்.

இதழாசிரியர்.

உ

திருச்சிற்றம்பலம்.

தமிழ்ப் புலவருக்கு மாநிலவளாக அறிவு.

(Geographical Knowledge among Tamil Poets)

நான் வேலையிலிருந்துவரும் இக்கலைநிலையத்து, ஒருகால், பல்கலைக்கழகத்து நடுத்தரவகுப்பு மாணவர் தமக்குப் பாடமாக அவ்வாண்டில் நியமிக்கப்பட்டிருந்த **நளவெண்பாவைப்** பொருளாகக்கொண்டு ஒரு சொற்பொழி வாற்றும்படி யிவ்வூர் வழக்கறிஞர் ஒருவரை வேண்ட, அவரும் மேடையேறித் தாம் மேற்கொண்ட பொருளிற் சில கூறினர். அக்கூற்றிற் சில குறைபாடுள்ளனவும் இருந்தன. அவற்றுளொன்றுபற்றி யெழுந்ததே யாகும் இக்கட்டுரை.

'நளன், சூதாடி அரசு முதலியவற்றை இழந்து, மக்களையும், மனைவியையும் பிரிந்து, **தான்போகும் வழியில்,** நெருப்பில் வளைப்புண்டு மலங்கிய ஒரு பாம்பை விடுவித்து, அப்பாம்பு கூறியபடியே **அயோத்தியை** அடைந்து, சிலகாலம் தங்கிப்பின், பிரிந்த மனைவிமக்களையும் இழந்த அரசு முதலியவற்றையும் பெற்று இனிது வாழ்ந்திருந்தனன்' என்னும் இப்பகுதியில் ஒரு

குறை நளவெண்பாவில் தாம் கண்டதாக அச் சொற்பொழிவாளர் கலப்புத் தமிழாற் கூறினர்.

அது;—

" நிடதநாட்டின் நீங்கின நளன், காட்டில் அலைந்து திரிந்து கடைசியில் அயோத்தியை யடைந்தனன் என்றுகூறும் புகழேந்தியார், வழியில் அவன் கடலையடைந்ததையும், கடற்கரைப் பொருள்களைக்கண்டு புலம்பினதையும் கூறுகிறார். நிடத நாட்டின் நீங்கி அயோத்திக்குப் போகிறவன் கடலைச் சந்திக்க யாதோரியைபுமில்லை. பின், புகழேந்தியார் அவ்வாறு கூறியது எதனால் எனின், அவருக்கு ஜாகிரபிகல் நாலெட்ஜ் (Geographical knowledge) இல்லாமையால்தான். தமிழ்ப் புலவர்களுக்கே ஜாக்ரபிகல் நாலெட்ஜ் கிடையாது " என்பதாம். இவ்விருகூற்றில் முன்னதனை முன்ன மேற்கொள்வாம். அதிலும் புகழேந்தியார்க்கு மாநிலவளாக அறிவுண்மையை முதற்கண்கண்டு, பின்னர், நளன் கடற்கரையடைய விருந்தமையையும் காண்பாம்.

புகழேந்தியார் மாநிலவளாக வறிவில் நிரம்பினவரே. ஒருவருக்கு இவ்வறிவு, அவ்வவ்விடத்து மலை, ஆறு, கடல், வெளிகள் முதலியவற்றையும், அவற்றின் இயல்புகளையும் நேரிற் பார்ப்பதனாலும், நேரிற் பார்த்துவந்த ஆத்தர் மொழிகளைக் கேட்டும், கற்றும், அவ்வவ்வுருவம் வரைந்த கிழி (Map)களைப் பார்த்தும் உணர்வதனாலும் உண்டாகத்தக்கதாம். இவ்வகைகளால் புகழேந்தியார் இவ்வறிவு நிரம்பப் பெற்றவராவர்.

இப்பொழுது, இந்தியாவின் பரப்பு, இடச்சிறப்பு இவற்றை வரைந்த ஒரு கிழியை எடுத்துப் பார்ப்போமானால், அதில் பம்பாய் நாட்டைச்சார்ந்த காந்தேசம் (Khandesh) என்னும் பகுதியையும், நள்ளிடைவளாகங்களை (Centeral Provinces) அடுத்த பேரார் (Berar) என்னும் பகுதியையும் காணலாம். இவற்றுள், காந்தேசம் என்பது, நிடதநாடெனவும், பேரார் என்பது விதர்ப்பநாடெனவும், முன்னை நாளில் வழங்கி வந்தது இது பரிதிமாற்கலைஞர் எழுதிய நளவெண்பா முக

வுரையானும் அறியப்படும். (க) இவற்றுள் நிடதநாடாகிய காந்தேசம் மேல்கடலையடுத்தநாடு என்பதைக் கிழியில் India Map காணலாம். இதனை நன்கறிந்த நமது புகழேந்திப்புலவர் நிடத நாட்டைக் கூறுங்கால் அது கடலையடுத்ததென்று கூறுவர். அதனை,

எற்றித் திரைபொரநொந் தேறி யிளமணலிற்
பற்றிப் பவளம் படர்நிழற்கீழ்—முத்தீன்று
வெள்வளைத்தா யோடுநீர் வேலைத் திருநாடன்
புள்வளைத்தா ளுடையாற் போந்து (கலிதொடர்—அச)

என்னும் பாடலாலும்,

போதலருங் கண்ணியான் போர்வேந்தர் சூழப்போய்க்
காதலிதன் காதலனைக் கண்ணுற்றான்—ஓதம்
வரிவளைகொண் டேறும் வளநாடன் றன்னைத்
தெரிவரிதா நின்றான் திகைத்து. (கலிநீங்கு—கூஎ)

என்னும் பாடலாலும் அறியலாம்.

(உ) காந்தேசத்தின் (நிடதம்) கீழெல்லையாய் இணைந்திருப்பது பேரார். (விதர்ப்பம்) இதனைக் கிழியிற் காணலாம். இதனையறிந்த நமது புலவர், நளன் தமயந்தியின் சுயம்வரத்துக்குப் போம் வழியில் வைத்து விளக்குவர்.

அதனை:—

சடைச்செந்நெல் பொன்விளைக்கும் தன்னாடு பின்னாக்
கடற்றானை முன்னாகக் கண்டான்—அடற்கமைந்த
வில்லியரும் பொற்றொடி வீமன் றிருமகளாம்
நல்லுயிரும் வாழும் நகர். (சுயம்வரம்—கூஅ)

என்னும் பாடலால் அறியலாம்.

(ங) பேராருக்கும், காந்தேசத்துக்கும் போகும் வழியில் பல மலைத்தொடர்கள் இருக்கின்றன. ஆதலின் இந்நாடு ஒன்றிலிருந்து, மற்றொன்றுக்குப் போவோர் இம்மலைத் தொடர்களைக் கடந்தே போகவேண்டுமென்பது கிழியிற் காணலாம். இதனையறிந்த நமதுபுகழேந்தியார், கலிநீங்கப்பெற்ற நளன் தன்மனைவி மக்களோடு, விதர்ப்பநாடு (பேரார்) நீங்கி, நிடதநாடு (காந்

தேசம்) போகும்வழியில் "இன்னும் நாம் செல்ல விருக்கும் தூரம் எவ்வளவு? எனக் கேட்ட தன்மனைவிக்கு, "நாம் அடைந்த இந்த மலையைத் தவிர இன்னும் ஏழு மலைகளைக் கடந்தால் நாம் செல்லவேண்டியவழிமுடியும்; அவ்விடத்தது நமது மாவிந்தநகரம் என்று அந்நளன் கூறியதாகக் கூறுவர்.

அதனை,

தானவரை வெல்லத் தரித்தநெடு வைவேலாய்
ஏனைநெறி தூரமினி எத்தனையோ?—மானேகேள்
இந்த வரைகடந் தேழுவரைக் கப்புறம்மா
விந்தம்எனும் நம்பதிதான் மிக்கு (கலிநீங்கு. அஉ)

என்னும் பாடலால் அறியலாம்.

புகழேந்தியாரின் மாநிலவளாகக் அறிவைக்காண இக்கூறிய சான்றுகளேபோதும். இனி இம்முடிபின் மறுதலைக்கு வலி தருவது போற்காணும் இரண்டொரு கூற்றுக்களையும் ஆய்ந்து நம்கொள்கையை நன்கு காண்பாம்.

(க) போருக்கும் காங்கேசத்துக்கும் எல்லையான இடத்தில் **தப்தி** என்னும் ஆறு, **பூரணை** என்னும் ஆற்றால் கூடப்பட்டு ஓடுகிறது. கீழக்குப்பக்கங்களிலிருந்து காங்கேசத்துக்குப் போகவேண்டுமானால், இக் **கூடுதுறையைக்** கடந்தே போகவேண்டும். இதனைக்கிழியிற் காணலாம். இதனையறிந்த நமது புலவர் தமதுநூலில் உரிய இடங்களில் இதனைக்கூறினர். கூறுங்கால், கற்போர்க்கு **உய்த்துணரவைப்** பாக, ஒருவகைக் **கவிமரபு** பற்றிய குறிப்புமொழியாற் கூறினர். அக்கவிமரபாவது:-**ஓரினத்திற் சிறப்புடைய ஒரு பொருளின் பெயரை அவ்வினத்தின் ஏனைப்பொருட்டும் கூறும்** வழக்கமாம். அம்மரபுபற்றியே நமது புலவர் **தப்தி** யென்னும் ஆற்றைக் **கங்கையென்று** குறித்தனர்.

கங்கையென்னும் பேராறு விந்தியமலையின் வடக்கே பாய்வது; தப்தி என்பது அம்மலையின் தெற்கே பாய்வது; கங்கைக்கும் தப்திக்கும் யாதோரியைபுமில்லை. ஆயினும், முன்கூறிய மூன்று ஏதுக்களாலும் நமது புலவரது மாநிலவளாக அறிவின்

திறத்தை நன்கு கண்டோமாதலின், இங்குமட்டும் அவர் அறியாது மயங்கிக் கூறினார் எனல், எவ்வாற்றானும் பொருந்தாது; **கவிமரபு** பற்றியே அவ்வாறு கூறினாரெனவே கொள்ள வேண்டும்.

இவ்வாறே மற்றைப் புலவர் பெருமக்களும் இக் கவிமரபு பற்றிக் கூறியிருக்கின்றனர்:—

திரிபுரசங்கார காலத்தில் எம்மையாளுடைய சிவபிரான் வில்லாகக்கைக் கொண்டது **மேருமலை** யென்பது புராணப்பிரசித்தம். அங்ஙனமாகவும், **சக்கிரவர்த்திப் பட்டம்** பெற்ற ஒரு புலவர் தமது பெருங்காப்பியத்தில்

இமயவில் வாங்கிய வீசன் பங்குறை
யுமையினை யிகழ்ந்தன னென்ன வோங்கிய
கமையறு சினத்தனிக் கார்முகங் கொளாச்
சமைவுறு தக்கனார் வேள்வி சாரவே
(கம். பால. கா—கஉ)

என இமயமலையை வில்லாக வளைத்த ஈசன் என்று கூறுகின்றார். ஒருபுராணக் கதை கூறவந்த இடத்திலும், புராணத்துக்கு முரண்பாடாக அறியாது, மயங்கி ஒன்றை மற்றொன்றாகக் கூறினார் என்பது சாலுமா? மலையினத்திற் சிறந்தது இமயம்; அதன் பெயரை ஏனை மலைகளுக்குக் கூறுவது கவிசம்பிரதாயம். அது பற்றியே அங்ஙனம் கூறினார் எனக் கொள்ளவேண்டும்.

இவ்வாறே, **மந்தரம்** என்னும் மலையை மத்தாகக் கொண்டு கடல் கடைந்தனரெனக் கூறவந்த மற்றொரு பெருங்காப்பிய நூலாசிரியரும்

இத்தலை யிவர்க ளேக **இமயம்நட்டு** அரவு சுற்றி
அத்தலைப்பலற முந்நீர் கடைந்த வாரவ மொப்ப
(சீவக. குணமாலை—கககூ)

என இக்கவிமரபுபற்றிக் கூறியதூஉம் காண்க.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

இம்மரபு பற்றியே புகழேந்தியாரும், **தப்தி** என்ற ஆற்றைக் குறிக்குமிடத்து ஆறுகளிற் சிறந்ததாகிய கங்கையின் பெயராற்குறித்தனர். இதனால் இவர் மாநிலவளாக அறிவு பிழைத்துணர்ந்தவராகார். இவ்வாற்றினை, **யமுனை** யென்றாவது, **சோனை** யென்றாவது கூறியிருப்பின் மட்டுமே அங்ஙனங்கொள்ளத்தகுமென விடுக்க.

இன்னும் இவ்வாறே, நளவெண்பாவில், இக்கொள்கைக்கு முரண்போல் தோன்றும் பகுதிகளெல்லாம் ஊன்றியறியின் நமது புலவர் பெருமானின் மாநிலவளாக அறிவினைத் திட்பமாகக் காட்டும் சான்றுகளாக நிலவுமென்க.

நிடதநாட்டிற்கும், விதர்ப்பநாட்டிற்கும் எல்லையாகிய இடைவழியில் தப்தியாறு ஒழுகும் தன்மையையுட் கொண்டே, நமது புலவர், நளன் தமயந்தியை மணந்து தன்னாடுபுகும்போது, இவ்வாற்றையடைந்தானென்றும், அங்கிருந்து சென்று, தன்னகரம் தோன்றுவதைப் **பதிபரிசுரைததலாகத்** தன் மனைவிக்குரைத்தானென்றும் கூறுவர்.

அதனை,

வேரி மழைதுளிக்கும் மேகக் கருங்கூந்தற்
காரிகையும் தானும்போய்க் **கண்ணுற்றன்**—மூரித்
திரையேற மென்கிடங்கிற் சேலேற வாளை
கரையேறுங் **கங்கைக் கரை** (கலிதொடர்—௨௯)
வான்றோய நீண்டுயர்ந்த மாடக் கொடிநுடங்கத்
தான்றோன்றும் மற்றித் தடம்பதிதான்—வான்றோன்றி
வில்விளக்கே பூக்கும் விதர்ப்பநா டாளுடையான்
நல்விளக்கே யெங்க ணகர் (ஷை—௨௮)

என்னும் பாட்டலால் அறியலாம்.

(தொடரும்.)

அ. கந்தசாமிப்பிள்ளை.

உ

திருச்சிற்றம்பலம்

ஆளுடைய நம்பிகள் திருப்பாட்டு.

தமிழ்மணங் கமழும் செம்பொருட் டிருநெறி, தமிழுலகேயன்றி எவ்வுலகத்தினும் விளங்குமாறு தோன்றி விளங்கிய முதன்மையாசிரியர் நால்வராவார்—ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசுகள், ஆளுடைய நம்பிகள், ஆளுடைய அடிகள் எனப்பெறுவர். இவர்களுள் ஒருவராகிய நம்பிகளின் திருக்கதையினை அறியாத திருநெறித்தமிழர் இலையென்று கூறுதல் மிகையாகாது. அவர்கள் பாடிய திருப்பாட்டிற் சில எழுதலாம் எனத் துணிந்தேம். அவையிற்றை எழுதலாற் பயன் என்னையோ எனின், நம்பிகளின் திருக்கதையினை விரித்துப்பாடியவர் பெருநெறிக்கொண்டல் அருண்மொழித் தேவப் பெருமானார். அப்பெருமானார் பாட்டிலேயன்றிச் சரித்திரத் தலைவராகிய நம்பிகளின் திருவாய்மொழியிலும் அவர்களுடைய சரித்திரச் சான்று தோன்றக் கிடத்தலும், அப்பாட்டுக்களின் அழகு முதலியனவும் ஒருபுடை வெளிப்படலே என்க. சேக்கிழார் பெருமான் கூறி இருக்கவும், இவர்-பாட்டை எடுத்துக்காட்டல் சரித்திரத்திற்குப் பெரும்பயன் விளைக்குமோ எனின் 'பிறர்சொல்வதையாம் ஒப்பேம்; தம் வாயாற் கூறியவற்றையே ஒப்புவேம் எனக்கூறும் ஒருசாரார் ஒப்புதலும், பொய்ம்மைமொழி புகறலறியாத சேக்கிழார் போன்ற புலவர் பெருமக்களின் உள்ளக்கிடையை நன்குணராது புராணம் முதலிய பொய்ம்மை புகல்வ என்று கூறும் சிலர் கூற்றுச் சிறுமையுடையன எனல் தோன்றலும் பயன் என்க.

நம்பிகளின் கதைப்பகுதியில் பெரும்பாலனவும் கேட்டோர்க்கு வியப்பையும், கடவுட்டன்மையையும் பயக்கும் எனினும், சிறுபாலன அவற்றை மிக மிக விளக்கும் என்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தது. அவையாவன-இறைவர் தம்மை ஆவணங்காட்டி ஆட்கொண்டதும், பரவையாரையும் சங்கிலியாரை

யும் தம்மொடு இறைவன் புணர்த்தியதும், முதலையுண்ட பிள்ளையை அழைத்ததும் பிறவும் ஆம்.

நம்பிகளை ஆளாகக் கோடல் உள்ளி மணந்தடுத்து வழக்கவைக் கிழித்துவந்த இறைவனாரை வெண்ணெய்நல்லூர் அவையார் 'உமக்கு நம்பியாரூரன் அடிமை என்பதற்கு ஆட்சி (அநுபம்) யாலாவது, ஆவணத்(பத்திரத்)தாலாவது, காட்சி (சாட்சி) யாலாவது பூட்கை நிறுவி உறுதிப்படுத்துவீராக' எனக்கடாவிப் பணியிட்டார்க்கு இறைவனார் இந்நம்பியாரூரன் சினத்தாற் 'கிழித்தவோலை' 'படியோலை' 'மூலவோலை' வேறுள்ளதென்று கூறினர். பின்னர் அந்தணர் காட்டுமாறு கட்டளையிட்டனர். 'நீவிர் அவன்மறுமுறையும் கிழிக்காதபடி செய்வீராயின், யான் காட்டுவல்' என்று காட்டியருளினர். இந்நிகழ்ச்சியைக் கூறுமிடத்துத் தமிழ்ச் சொற்களைப் (கரந்தைத் தமிழ்ச்சங்கம்போலப்) பெருக்கிய சேக்கிழார் பெருமானர்

" ஆட்சியி லாவ ணத்தி லன்றிமற் றயலார் தங்கள்
காட்சியின் மூன்றி லொன்று காட்டுவாய் என்ன முன்னே
மூட்சியிற் கிழித்த வோலை படியோலை மூல வோலை
மாட்சியிற் காட்ட வைத்தேன் என்றனன் மாயை வல்லான்.

வல்லையேற் காட்டி கென்ன மறையவன் வலிசெய் யாமல்
சொல்லநீர் வல்லீ ராகிற் காட்டுவே னென்று சொல்லச்
செல்வநான் மறையோர் நாங்க ளுங்குற வொட்டோ மென்றார்
அல்லறீர்த் தாள நின்றா ராவணங் கொண்டு சென்றார் "

என்றார். இவற்றுட் பின்பாட்டில் " அல்லல்தீர்த்தாளநின்றார்" என்ற சொற்றொடரின் பொருளை நாமும் நின்று ஆராயின் தமக்கென ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாத தாம் அடியாரையாடற்பொருட்டு ஓர் உருவம் எடுத்துத் தமக்குக் கீழாகவுள்ள மக்கள் உயர்ந்த அணைமிசை இனிதிருக்கத் தாம் கீழ்நின்றார் என்னும் பொருள் குறிப்பிற்கிடத்தல் காண்க. இறைவனாரும் முறைவேண்டித் தம்மிடத்துவந்து கீழ்நின்று வழக்கு முடித்துக் கொள்ளுமாறு அறம்விழைந்த முறைமன்ற மக்களின் பெருமை

என்னே! என்னே!! சேக்கிழார் பெருமானர் இறைவனார் நம்பிகட்கு வன்றொண்டன் என்னும் பெயர் சூட்டியதை " மற்று நீ வன்மைபேசி வன்றொண்ட னென்னும் நாமம்–பெற்றனை " என்று கூறுகின்றார். அவற்றை நம் ஆளுடைய நம்பிகளும்

" தன்மையினாலடியேனைத்தாமாட்கொண்டநாட்சபைமுன்
வன்மைகள்பேசிடவன்றொண்டனென்பதோர்வாழ்வுதந்தார்
புன்மைகள் பேசவும் பொன்னைத்தந் தென்னைப்போகம் புணர்த்த
நன்மையினார்க்கிடமாவதுநந்திருநாவலூரே.

மிடுக்குண்டென்றோடியோர்வெற்பெடுத்தான்வலியைநெரித்தார்
அடக்கங்கொண்டாவணங்காட்டிநல்வெண்ணெயூர்
ஆளும் கொண்டார்
தடுக்கவொண்ணாததோர்வேழத்தினைஉரித்திட்டுமையை
நடுக்கங்கண்டார்க்கிடமாவதுநந்திருநாவலூரே.

உம்பரார்கோனைத்திண்டோண்முரித்தார்உரித்தார்களிற்றைச்
செம்பொனார்தீவண்ணர்தூவண்ணர்நீற்றரோர்ஆவணத்தால்
எம்பிரானார்வெண்ணெய்நல்லூரில்வைத்துஎன்னை
ஆளும்கொண்ட
நம்பிரானார்க் கிடமாவது நந்திரு நாவலூரே."

என்றுகூறி அருளினர்கள். இவற்றுள் தம்மையாட் கொண்டதும், ஆட்கொண்ட சபையும், தமக்கு வன்றொண்டன் என்னும் பெயர் தந்ததும், தம்மையாட்கொண்டவிடம் திருவெண்ணெய் நல்லூர் என்பதும் நன்கு விளக்கப்பெற்றுள்ளன.

மறவருள்கொண்டு உம்பரார் கோனைத் திண்டோள் முரித்தவரும், களிற்றை உரித்தவரும், தனக்கு வலியுளதென்றெண்ணித் தம்மலையெடுத்த அரக்கர் கோமான் ஆற்றலை அடக்கியவரும் ஆகிய இறைவனார் அறவருள்கொண்டு தன்மையோடு அடக்கமுடையவராய்த் தம்மைக் காட்டிக்கொண்டு அடிமையோலை காட்டி அருளினர் என்று பாராட்டி உருகுதல் பாராட்டுதற் குரித்து. ஆணவமல இருளில் அழுந்தி ஈடேறுதலை மறந்து கிடந்தநிலையில் தாமேவலிய ஆட்கொண்டார் என்பார் "தாமாட்

கொண்ட” எனவும், தமக்குவன்றொண்டன் என்பதோர் பெயர்க்குக் காரணம் கடவுளிடத்து வன்சொற்கள் பேசியதே என்பார் “வன்மைகள் பேசிட வன்றொண்டன்” எனவும், இவ்வன்றொண்டன் என்னும் பட்டம் ஏனைய (இராவ்பகதூர், திவான் பகதூர் முதலிய) பட்டங்களைப்போல் அழியும் தன்மை யுடையதன்று; பால் புளிப்பினும், பகலிரா மாறினும், மறைநெறி பிறழினும் பொன்றாது, கடவுள் உள்ள வளவும் நிற்றலே அன்றிக் கயிலையோங்கலென ஓங்குந் தகுதியுடைத் தென்பார் “வாழ்வு தந்தார்” எனவும் கூறுகின்றார். தாம் தம்பிரானுக்குத் தோழர் என்பதுபட ஒத்தோர் மாட்டுப்பொருள் பெறுதற்குக் கூறும் தா என்னும் கிளவியடியாகத் தோன்றிய “தந்தார்” என்னும் சொல்லை ஈண்டு அமைத்தது அதுசெய்த தவம்போலும்.

நம்பிகள் திருவோணகாந்தன்றளிக்குச் சென்று கடவுளை வணங்கியகாலை திருவெண்ணெய்நல்லூரில் தம்மைஆட்கொண்ட திருஉருவம் ஈண்டு வேறொரு கோலம் கொண்டுள்ளது என்பது பெற,

“ ஓவணமேலெருதொன்றேறுமோணகாந்தன்றளியுளார்தாம்
ஆவணஞ்செய்தாளுங்கொண்டவரைதுகிலொடுபட்டுவீக்கிக்
கோவணமேற்கொண்டவேடங்கோவையாகவாரூரன்சொன்ன
பாவணத்தமிழ்பத்தும்வல்லார்க்குப்பறையும்தாம்செய்த
பாவந்தானே”

என அருள்செய்கின்றார். இறைவர் புரிந்தது பொய்க்கைச்சாத்து (Forgery) என்பது “ஆவணம்செய்து ஆளுங்கொண்ட என்ற தொடருள் செய்து என்பதனாலும் எச்ச வும்மையாலும் விளங்கிக் கிடத்தல் காண்க.

குண்டையூர்க் கிழாரால் இவர்க்குக் கொடுக்கப்பெற்ற நெல்லைத் திருவாரூர்ப் பரவையார் இல்லிற்குக் கொண்டுவருதற்குத் திருக்கோளிலிப் பெருமானை ஆட்கடந்தருளும்படி வேண்டியவிடத்து

“ ஆளிடவேண் டிக்கொள்வார் அருகுதிருப் பதியான
...பாடுதலும்” எனக் கூறியுள்

....

ளார் சேக்கிழார் பெருமானார். நம்பிகள் பாடியுள்ள இக்கோளிலிப் பதிகத்தின் கண்ணுள்ள அழகும், வினயமும் சீராட்டற்குரியன. இப்பதிகத்தில் உள்ள ஒவ்வொரு பாட்டிலும் “சில நெல்லுப் பெற்றேன்” என்ற தொடர் அமைப்பு பெற்றுள்ளது. இதனை நோக்குங்கால் இறைவனாரை நெல்லெடுத்தற்கு வேண்டுமிடத்து இவ்வளவு பேரளவுடைய நெல்லையும் எப்படிக்கொண்டு வருமாறு செய்தல் கூடும் என்னும் கடா அவர் நிகழ்த்தாதிருத்தற் பொருட்டு முன்னரே தாம் நெற்கள் பேரளவுடையன அல்ல கொஞ்சமே என்பதும், கொண்டுய்த்தற்கு ஆட்கள் தருவாயாக என வேண்டுதற்குத் தோற்றுவாயும் தோன்றுகின்றன. வறுமைக் காலத்தின்கட் பெண்டிர் கணவரை வருத்தும் வருத்தத்தை நன்கறிதலோடு நீ பெண்டிரைப் பேணலும்உடையாய்: அஃதேபோல நானும் பரவையாரைப் பேணல் வேண்டும் என்பார் “பாதியோர் பெண்ணைவைத்தாய் படருஞ்சடைக்கங்கை வைத்தாய்—மாதர்நல்லார் வருத்தம் அது நீயும் அறிதி” என்று கூறுதல் நகைச்சுவை விளைத்தல் காண்க.

இவர்க்கு இறைவனார் தோழராய் இருந்தார் என்பதனையும், தம்மனைவியாராகிய பரவையாரின் புலவிநீக்கித் தம்மை அவரொடு சேர்த்து வைத்தற்குப் பேயும் உறங்கும் பானாள் இரவினில் தேரூரும் திருவாரூர்வீதியில் ஊரூரும் பலபேசுமாறு இருகாற் றூது சென்றார் என்பதனையும்

“ தோழனுமா யான்செய்யும் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை”

என்னும் அடிகள் வற்புறுத்துகின்றன. எக்காலத்தும், எவ்விடத்தும் இறைவனார் பெருமையையும் அடிகளார் பெருமையையும் வற்புறுத்திக்காட்டுதல் அடிகளே. ஆதலான் ஈதோர் வியப்பன்று. சங்கிலியாரைத் தமக்குமணஞ் செய்துதந்ததனை “நொய்யேனைப் பொருட்படுத்துச்—சங்கிலியோ டெனைப்புணர்த்த தத்துவனை” என்பதனால் அறியலாகும்.

ஒற்றியினீங்கித் திருவாரூர் புகேன் எனக்கூறியசூளைமறந்து 'ஆரூர் இறையை எத்தனைநாட் பிரிந்திருப்பேன்' எனக்கூறி ஆரூருக்கு எழுமிடத்து இறைவனருளாற் கண்ணிரண்டும் கெட்டன. வழுக்கிவீழினும் இறைவனார் திருப்பெயரையே கருதுதலும் சொல்லுதலும் செய்யு மெய்யன்பர் பல்லாருகக் கண்தருமாறு வேண்டித் தராமையாற் பின்னர்,

"மகத்திற் புக்கதோர் சனியெனக் காணுய் மைந்தனே மணியே
மணவாளா
அகத்திற் பெண்டுக ளானென்று சொன்ன லைபேயேற்போ
குருடா யெனத்தரியேன்
முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன் முக்கணு முறையோ
மறையோதீ
உகைக்குந் தண்கடல் ஓதம்வந் துலவு மொற்றியூ றெனுமூ
ருறைவானே."
என்று கூறுகின்றார்.

இதனுள் குறிநாறமுவினாராய் மகவுடுவிற் புகுந்த கரியன் வருத்துமாறுபோல, இறைவ! நீ என்னை வருத்துகின்றனையே எனப்புலந்து சினந்து கூறுகின்றனர். தஞ்சைவாணன் கோவை யாசிரியர் "மகத்துச்சனி" என இத்தொடரை யாசிரிய வசனமாக எடுத்தாண்டுள்ளது ஈண்டுக் குறிக்கத்தக்கது.

நான் ஏதாவதொரு சொற்பணித்தவழிப் பெண்டிர் குருடா என்று என்னை இழித்துக்கூறின் என் நிலைமை என்னுகும் என்று இரங்குதல் மிகமிக நகைச்சுவையும் வீரச்சுவையும் விக்கின்றது. "முகத்திற் கண்ணிழந்தெங்ஙனம் வாழ்கேன் முக்கணு முறையோ மறைஓதீ" என்ற தொடரில் முகத்திற்கு அழகுப்பயப்பனவும், உடற்குச்சிறந்த உறுப்பாவனவும் கண்கள் இரண்டே அவற்றை இழந்து நான் எவ்வாறு உயிர் வாழ்வேன் என்பதும், என் கண்கள் இரண்டினையும் கெடுத்து விட்டு நீ மாத்திரம் முகத்தொடு நெற்றியினும் கண்கொண்டு முக்கண்ணனய் விளங்குகின்றனையே யெனவும், பொருள் சில்வுடையார்க்குப் பொருள் பலவுடையார் கொடுத்தல் மதியுடை

யார் வழக்காயிருக்க நீ என் கண்ணிரண்டையும் பிடுங்கிக் கொண்டது மதியுடையாய்க்கு வழக்காஎன்பதும், சீரிய நூல்களை நன்குமுறைப்பட ஓதிய நினக்கு இஃது முறையன்று என்பதும் தோன்றல்காண்க. இக்கருத்தை யுள்ளடக்கியே சேக்கிழார் பெருமானும் நம்பிகள்கூற்றாக "விண்ணுள்ளார் அமுதுண்ண மிக்க பெருவிடமுண்ட—கண்ணுளா" எனக் கண்ணுளா என்பதை இரட்டுற மொழிதலாக நம்பிகள் காஞ்சியிற் கண்வேண்டுமிடத்து அமைத்துள்ளார்.

திருவெண்பாக்கத்திற்சென்று இறைவனைக் கண்டருமாறு வேண்டுமிடத்து "பொன்னவிலுங் கொன்றையினய் போய் மகிழ்க்கீழ் இருவென்று—சொன்னவெனைக் காணுமே" என்று கூறுதலான் இறைவன் கட்டளைப்படித் தான் மகிழமரத்தடியிற் சூள்செய்துதந்தது புலனுகின்றது. அப்பதிகத்தில் "ஊன்றுவதோர் கோலருளி உளோம் போகீர் என்றனே" என்பதனுல் ஊன்றுகோல் பெற்றது தெரிகின்றது. இவ்வாறு சினந்து கூறும் நிலையிலும் செந்நாப் புலவர் இறைவனுற் கொடுக்கப்படும் ஊன்றுகோலையே அவாவி நிற்பது உற்று நோக்குவார்க்கு வியப்பைத்தராமல் இராது.

பின்னர் திருவாரூர் மூலட்டானம் புகுந்து இறைவனைத் தொழும்போது முன் ஒரு (இடக்)கண் கொடுத்தீர் இன்னும் ஒரு கண்ணினையும் தருவீராக என்னும் கருத்துடன் "மற்றைக்கண்டான்தாராதொழிந்தால்வாழ்ந்துபோதீரே" எனக் கூறியருளுகின்றார்.

"காரூர்கண்டத்தெண்டோண்முக்கண்கலைகள்பலவாகி
ஆரூர்திருமூலத்தானத்தேஅடிப்பேர்ஆரூரன்
பாரூரறியஎன்கண்கொண்டீர்நீரேபழிபட்டீர்
வாரூர்முலையாள்பாகம்கொண்டீர்வாழ்ந்துபோதீரே"
என்று கூறும் இந் நம்பிதிருப்பாட்டுள் "நீர் மாத்திரம் மனைவியுடன்கூடி இன்பம் நுகருகின்றீரே; யான் அது செய்து கோடற் பொருட்டுச் சிறிதுபிழை இழைக்கின் என் கண்ணைப் பிடுங்குதல் நுமக்கு அழகா என்று கூறுதலில் உள்ள ஏசுநயம் காண்க.

இம் முறையே இவருடைய திருப்பாட்டுக்களை நோக்கின் சரித்திர ஆராய்ச்சிக்கும், தொண்டர் புராணத்திற்கும் பற்றுக் கோடாவன பல.

இங்கு எடுத்துக்காட்டிய வாறெல்லாம் இறைவனுரைத் தோழமை முறையிற் பாடியிருப்பினும், இறைவனுரின்கட் கொண்டுள்ள அன்பும், ஓலைகாட்டி நீ அடிமை நான் ஆண்டான் எனப்பலரறியக்கூறி ஆட்கொண்டமையால் மறைவழிப்பட்ட திருநெறிவழக்கிற் கூறும் **ஆண்டானடிமை** என்னும் அடிப் பட்ட வழக்கைத் தமக்கே உரிமையாக்கிக்கொண்ட நிலையும் தினையளவும் மாறுபாடுடையார்அல்லர் என்பதற்கு, ஒரு பானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம் என்னுமாறு திருப்பாட்டு ஒன்று காட்டுதும்.

"விற்றுக்கொள்வீர்ஒற்றியல்லேன்விரும்பியாட்பட்டேன்
குற்றமொன்றும் செய்ததில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக்கடிகள் என்கண்கொண்டீர் நீரே பழிபட்டீர்" என்ற

இதனுள் இறைவர்க்கு ஒருவாற்றான் உரிய பொருளும், ஒருவாற்றான் உரிமையல்லாத பொருளுமாகிய ஒற்றிப்பொருளல்லேன்; யாண்டும் விற்கவும் பிற செய்யவும் வல்ல உரிமைப்பொருளே என்றுகூறுதலான் ஆண்டான் அடிமையும், நீரே பழிபட்டீர் என்பதனாற் சிவமேதான் எனும் உணர்வில் நிலையும் (சிவோகம் பாவனையும்) விளங்கல் காண்க. இக்கருத்து ஆளுடைய அடிகள் மணிமொழியினும்

"இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை
என்னின் அல்லால்—விருந்தின னேனை விடுதிகண்டாய்"

எனவந்துள்ள துள்ளுக.

நம்பிகள் கருத்தும் ஏனைப்பெரியார் கருத்தும் அமைந்து கிடத்தலிற் சில காட்டுதும் :—

"அற்றார்**பிறவிக்கடல்**நீந்திஏறிஅடியேன்உய்யப்
போவதோர்சூழல்சொல்லே" இக்கருத்துத் திருவாதவூரடிகள் மணிமொழியில் "தனியனேன் பெரும் பிறவிப்

பௌவத் தெவ்வத்தடந்திரையில்" என்று வந்திருத்தல் காண்க. மாணிக்கவாசகர் பிறவியைக்கடலாகக் கூறிய இடங்கள் பல அவற்றுள் ஈண்டு ஒன்றே காட்டப்பட்டது. "பிறவிப் பெருங்கடல் நீந்துவர்" என்பது **பொய்யாமொழி**. "**உறங்கி** விழித்தாற் ஒக்கும் இப்பிறவி" எனும் திருப்பாட்டும் "உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு" எனும் பொய்யாமொழியும் கருத்தும், சொல்லும் ஒருங்கொத்திருத்தல் காண்க.

"மணக் கோலமதே பிணக்கோலமதாம் பிறவி" என்னுந் திருப்பாட்டுடன், "மணப்பறையே பிணப்பறையாய் மணமகனே பிணமகனாய்" என்னும் பரஞ்சோதியார் சொல்லும் கருத்தும் "மன்றங் கறங்க மணப்பறை யாயின-அன்றவர்க் காங்கே பிணப் பறையாய்" என்னும் நாலடியின் கருத்தும் ஒத்திருத்தல் காண்க.

"அகரமுதலின் எழுத்தாகி நின்றாய்" என்னுந்திருப் பாட்டும்

"அகர முதல வெழுத்தெல்லா மாதி—பகவன் முதற்றே யுலகு"
என்னும் திருக்குறளும் கருத்தும், சொல்லும் ஒத்திருத்தல் கண்டு மகிழ்க.

(தொடரும்)

பூ. வே. மா. வீ. உலகவூழியன்,

வாடாக்கரந்தை.

உ

நக்கீரர்.

(முற்றொடர்ச்சி. 318)

அர :-(சிறிது கோபமாக) நீவிர் சென்றுவரலாம், வாயிலோய்! இவரை அழைத்துச்சென்று வேண்டுவன கொடுத்து அனுப்பிவை.

வாயி :-(வணங்கி) அப்படியே. (இருவரும் செல்லுதல்) (மற்றொருவாயிலோன் ஓடிவந்துவணங்கி)

வாயி :—அரசே! மற்றுமோர் புலவர் வந்திருக்கிறார்.

அர :-விரைவில் அவரையும் அழைத்துவருதி.

அமை :-வாயிலோய்! நீ போகும்பொழுது வேறுபுலவர்கள் வந்திருப்பின் அவர்களையும் சேர்த்து அழைத்து வந்துவிடுதி.

வாயி :-அப்படியே செய்கின்றேன்; இதோ யான்கூறிய புலவரும் வந்துவிட்டார்.

புல :-அரசே! வணக்கம்.

அர : நீர் எவ்வாறு எமது ஐயத்தினைத் தீர்க்கப்போகின்றீர்?

புல :-அரசே! எனது செய்யுளைச் சிறிது மெதுவாகக் கேட்டருளிப் பொற்கிழியினை எனக்குத் தந்தருளவேண்டும். சென்ற பத்துநாட்களில் நாளொன்றுக்கு முன்னூற்றைம்பது அடிகள் விழுக்காடு எழுதி மூவாயிரத்தைந்நூறு அடிகள் கொண்ட அகவற்பா ஒன்று எழுதி வந்துள்ளேன். அதில் தாங்கள் கொண்டுள்ள ஐயத்தினைச் சுருக்கமாகவும், திருத்தமாகவும், விரிவாகவும், பெரிதாகவும், தெளிவாகவும், எளிதாகவும் எடுத்

துக்காட்டி விளக்கியுள்ளேன். முடிவாகப் பெண்களின் கூந்தலுக்கு மணம் செயற்கையால் உண்டாகிறதென்பதைப் பலமேற்கோள்களோடு எடுத்துக்காட்டியுள்ளேன்.

அர :-புலவரே! உமது செய்யுளைக்கேட்டுப் பொற்கிழி தரத் திங்கள் மூன்றாகும் போலத் தோற்றுகின்றமையின் நீர் இப்பொழுது சென்றுவரலாம். நீர் கேட்டுக்கொண்டபடி உமது செய்யுளைச் சிறிது மெதுவாகவே கேட்பேன். இப்பொழுது நீர் சென்றுவரலாம்.

புல :-அருள்கூர்ந்து இப்பொழுதே சிறிது கேட்டருளவேண்டும்.

அர :-அப்படியாயின் உமது செய்யுளின் முதல் முந்நூற்றைம்பது அடிகளை நாளைக்கேட்கின்றேன். இப்பொழுது சென்றுவருக. (புலவர் செல்லுதல்.)

அமைச்ச! எனது முயற்சி வீணென்றே எண்ணுகின்றேன். நமது சங்கப்புலவர்களும் எனது ஐயத்தினைத் தீர்க்க முன்வரவில்லையென்றால் வேறு யார்தாம் இதனைச் செய்வார்கள்? பெருமானுடைய திருவுளமும் இரங்கவில்லையே.

அமை :-அரசே! தாங்கள் இதனைக்குறித்துக் கவலவேண்டியதில்லை. பெருமான் தங்களைக் கைவிடார். சுந்தரப்பெருமானுக்குச் சண்பக சுந்தரரென்னும் பெயரை நாடெங்கணு முழங்கச் செய்த தாங்கள் கவல்வதற்கிடமேயில்லை. பொற்கிழி அப்படியே சங்கமண்டபத்திலிருக்கட்டும். இன்னம் இரண்டொரு நாளையிற் பெருமான் நமக்கு உதவி செய்வாரென்று நினைக்கின்றேன். பொழுதாயினமையின் இப்பொழுது நாம் செல்வோம்.

(எல்லோரும் செல்லுதல்)

களம்—ஏழு; அரனார்திருக்கோயில்.

காலம்—காலை.

நடிகன்—தருமி.

(தருமி கோயிலை நோக்கிவருதல்)

தருமி:—இவ்வழியேதான் செல்லவேண்டும். அதோ பெருமான் திருக்கோயிலின் திருக்கோபுரம் தெரிகின்றது. இவ்வழியேதான் செல்லவேண்டும்.

(நடந்துவந்து கோயின்முன் விழுந்து எழுந்து கூறல்)

தந்தை தாயிலேன் றனிய னாகிய
மைந்த னேன்புது வதுவை வேட்கையேன்
சிந்தை நோய்செயும் செல்லல் தீர்ப்பதற்கு
எந்தை யேயிது பதமென் றேத்துகேன்.

நெடிய வேதநூல் நிறைய வாகமம்
முடிய வோதிய முறையி னிற்கினும்
வடுவி லில்லற வாழ்க்கை யின்றிநின்
அடிய ருச்சனைக் கருக னாவனே.

ஐய யாவையு மறிதி யேகொலாம்
வையை நாடவர் மனக்க ருத்துணர்ந்
துய்ய வோர்கவி யுரைத்தெ னக்கருள்
செய்ய வேண்டுமென் மிடிமை தீர்க்கவே.

யாவர்க்கும் தாயுந்தந்தையுமாகிய பெரும! என் மனத்துயர் போக்குதற்கு இதுவே சமயம். எளியனேன் வழிபட்டுப் பிறவிப்பயனை யெய்துவதற்கு நின்னையன்றி வேறு பற்றிலேன். பாண்டியன் உளக்கருத்தினைப் புலப்படுத்தும் செய்யுளொன்று தந்தருள வேண்டும்.

ஆலவாய்ப் பெம்மான்:—அன்பனே, இச் செய்யுளைக் கொண்டு சென்று அரசனிடங்காட்டி நின் விருப்பினை நிறைவேற்றிக் கொள்க. (ஓலையொன்று வீழ்தல்)

தருமி:—அடிகேள், அவ்வண்ணமே செய்கின்றேன்.

களம்:—எட்டு: நகரின் ஒரு தெரு, சங்கமண்டபம்.

காலம்:—மாலை.

நடிகன்:—தருமி, கல்லாடனார், இடைக்காடனார், நக்கீரர்.

(கல்லாடனார், இடைக்காடனார், தருமி மூவரும் வருதல்)

கல்லாடனார்:—ஆயின் ஒன்று. நினக்கும், நினது செய்யுளுக்கும் பொருத்தமில்லை.

தரு:—தாம் கூறுவது எனக்கு விளங்கவில்லை.

கல்லாட:—அதாவது, நினது இளமைக்கும், நினது செய்யுளின் முதுமைக்கும் சிறிதும் இயைபில்லை யென்பதாகும்.

தரு:—அஃதெவ்வாறோ, தெரியச் சொல்லவேண்டும்.

கல்லாட:—மணம் இனி முடிக்கப்போவதாகவுங் கூறுகின்றனை.

தரு:—ஆம். அதனால்?

இடைக்:—அஃதிருக்கட்டும், நமது அரசன் பெண்களின் கூந்தலுக்குள்ள மணம் செயற்கையென்று செய்யுள் செய்தாரை யெல்லாம் புறக்கணித்ததிலிருந்து மணங் கூந்தலுக்கு இயற்கை யெனக் கருதுகின்றானென்பது தெரிகின்றதன்றோ?

கல்லாட:—அவ்வாறன்று: இயற்கையோ? செயற்கையோ? வென்னும் ஐயம் ஏற்பட்டமையாலேயே அதனைத் தவிர்த்து ஒருபாலுறுதிப் படுத்துமாறு நம்மைப் போன்ற புலவர்களை அரசன் வேண்டினன். செயற்கையெனச் செய்யுள் செய்தார் அதனை உறுதிப்படுத்தக்கூடிய வழியிற் செய்தாரிலர். அவ்வாறு செய்திருப்பார்களாயின் இவ்விளையோன் பொற்கிழி பெற்றிருக்கமாட்டான். எனினும் இவனது செய்யுள், முற்றவுங் கற்றுத்துறைபோகிய புலவர்களது செய்

யுளேபோல் மிளிர்கின்றது. தனது தலைவியின்மீது கொண்டிருக்கும் வரம்பிகந்த காதலினால் கூந்தலின் இயற்கையென மருண்டு அரசன் இவ்விளைஞனுக்குப் பொற்கிழிதந்தான் என்று நம்மைப்போன்றபுலவர் எண்ணிவிடாவண்ணம் இவனது செய்யுள் உள்ளுறை யடக்கித் தெள்ளுரை காட்டுகின்றது.

இடைக்:—ஆம். காதலினால் மயங்கி அரசன் ஒருபாற்கோடு தலினும், பல பூக்களின் தேனினை நாடோறுந்துய்க்கும் தும்பி மிகமயங்கிப் பூக்களுக்கு ஏற்றத்தினைக் கற்பித்தலுஞ் சாலும்.

கல்லாட:—அதனைத் தடுக்கவே இச்செய்யுள் "காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ" என நயம்பெறக் கூறப்பெற்றுளது.

தருமி:—(தனக்குள்) இவர்கள் பேசுவதென்னே? இறைவன் செய்யுளும் பிழைபடுமோ?

இடைக்காட:—அன்றியும், "நறியவும் உளவோ, நீ யறியும் பூவே" என்பது கூந்தல் இயற்கை மணமுள்ளதென்பதனையும், மலர் மணத்தினுஞ் சிறந்த மணமுள்ளதென்பதனையும் மிகவும் நயமாக எடுத்துக் காட்டுகின்றது. இதனாற்றான் இச்சிறுவன் இதனை எழுதியிருக்க முடியுமோவென ஐயங்கொண்டேன்.

கல்லாட:—இதோ சங்க மண்டபம் வந்துவிட்டோம். தருமி! அதோ தெரிகின்றது பொற்கிழி. நீ யதனை எடுத்துச்செல்லலாம். யாங்கள் அரசனுக்குத் தெரிவித்து விடுகின்றோம்.

(தருமி பொற்கிழியினருகே செல்லுதல்)

(நக்கீரர் வருதல்)

நக்கீரர்:—புலவரீர், இவ்விளையோன் யாவன்?

தருமி:—என் பெயர் தருமி யென்பார்கள்.

நக்:—ஈண்டு நிற்றல் ஏனோ?

தருமி:—ஐயனே! நமது அரசர் பெருமான் விருப்பின்படி அவர் ஐயத்தினைத் தீர்க்குஞ் செய்யுளொன்று அவர் திருமுன் கூறினேன். கூறியேனுக்குப் பொற்கிழிதந்தனர். இப்புலவர்களுடன் அதனை எடுத்துச் செல்லவே ஈண்டு வந்தேன்.

நக்:—செய்யுள் ஈண்டுளதோ?

தரு:—இதோ. (ஓலையைத்தருதல்)

நக்:—(படித்தல்)

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி!
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ; (நன்று)
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீ யறியும் பூவே? (நன்று)

செய்யுள் மிகச் செவ்வனே அமைந்துள்ளது.

(தருமி பொற்கிழியினிடஞ் செல்லுதல்.)

நக்:—நிற்க! செய்யுள் செவ்வனே அமைந்துள்ளது. எனினும் கிழியினை நீ யெடுத்த லொண்ணாது. சிறந்ததெனினும் செய்யுள் பொருட்குற்ற முள்ளது. அரிவையின் கூந்தல்மணம் செயற்கையே.

தரு:—அரசராதாணையின்படி நடத்தல் வேண்டுமே? செய்யுளை அவர் வியந்ததன்றி இப்புலவரும் வியந்தனரே?

நக்:—யாம் வியக்கின்றேமில்லை. அரசனிடஞ் சென்று புலவர் தலைவராகிய நக்கீரனார் கிழியினை எடுக்கவொட்டாது

தடுத்தனர் என்று கூறிக்கொள்க. புலவர்களே நாம் செல்வோம். இவ்விளைஞனுக்கு யாம் தோற்பதோ?

(மூவரும் செல்லுதல்)

தரு:-(தனிமையாகத் தனக்குள்) இஃதென்! கைக் கெட்டியது வாய்க்கெட்டாது போயிற்றே! யான் பொற்கிழி பெறுதொழியினும் ஒழிகின்றேன். சின்னாட் பல பிணிச் சிற்றறிவினராகிய மக்கள் இறைவனது செய்யுளுக்குங் குற்றங்கூற வல்லரோ! யானே செய்யுள் செய்திருப்பின் இவ்வாறு தருக்கித்திரியும் புலவரிடத்தே அதன்கதி என்னாகுமோ? செய்யுளுக்குப் பொற்கிழிதந்த சண்பகமாறனிடஞ் சென்று இப்புலவர் தடுத்ததைக் கூறுவதினும், இச்செய்யுளையே அருளிய சண்பகசுந்தரனிடஞ் சென்று முறையிடுவதே சிறந்ததாகும். புலவர்க்கஞ்சி இனி அரசன் மறுத்தலுங் கூடும். பெருமானிடமே செல்வோம்.

(செல்லுதல்)

உ.

திருச்சிற்றம்பலம்.

தமிழ்த்தாய் வாழ்த்து.

கற்றறி புலவருள் மகிழா களியா
நிச்சலு முறைதரு கனியே! சுவையே!
கட்டிவி ளையுமொரு கழையே! அளியேம்—உளமூறும்

கட்செவி யணியிறை யெனவே முதிரா
முத்தமிழ் துறைவளர் கடலே! மலையே!
கற்பக மெனவிழை வனவே தருவாய்—பெருதேவி!

உற்றன விடரவை களையா மறவா
திச்சிறு வர்கடமை யயலார் பழியா
துச்சமி கவடைய வருள்வாய் கலையே—இணையாக

ஒத்தவெ னுமொழிகள் விழவே யுலவா
தித்தரை யதுதனில் நிலையா வளர்வாய்!
ஒப்பிலை யெனநனி புகழ்வார் மொழிநூல்—உரைகாரர்

சுற்றிய வுடைதிரு மணிமே கலையே
முச்சியி லணிவது சிதறு மணியே
தொக்கபல் சிறுவர்கள் பெறவே தருவாய்—கலைமானே!

தொத்தும லர்களணி பொழில்சூழ் வளமார்
தெற்குறு மலைபெறு குறுமா முனிவோன்
சொற்குமி கமகிழு மொழியா மணமார்—சிறுகாலே!

தெற்றன மறைவளர் குறளா ரமையே!
எட்டலர் தொகைவிரி மலரார் கொடியே!
செப்புறு நிலமக டணிமா மகளே!—தமிழாயே!

செப்பமு டையவர்கள் உளமே எனவே
இக்கழ கமுமுயர் நலமே யுறவே
திக்குள வரைஇறை எனவா ழியவே—இனிதாயே!

மு. வே. மா. வீ. உலகவூழியன்,
வாடாக்கரந்தை.

உ

கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி விளக்கம்.

'கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி' என்று தலைப்பெயரிடப்பட்ட கட்டுரைகள் இதுகாறும் மூன்று முறை பத்திரிகைகளிலே வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் முதலாவது செந்தமிழ் ௭, ௮-ஆம் தொகுதிகளில் வெளிவந்து, பாதியில்நின்றது. இரண்டாவது செந்தமிழ் உ௯-ஆம் தொகுதி ௯, ௫-ஆம் பகுதிகளில் விரிவாக வெளிவந்து முற்றிற்று. எனினும், அம் முதலாராய்ச்சிக்கும் இவ்விரண்டாவதாராய்ச்சிக்கும் யாதொரு தொடர்புமில்லை. அவ்விரண்டுக்கும் இடையே சென்ற 14-வருட காலத்தில், முதலாராய்ச்சியை முற்றுவிக்க ....ஆராய்ச்சியாளர்க்கு அவகாசமும் செந்தமிழ்ப் பத்திரிகையில் இடமும் கிடைக்காமலிருந்து, அப்பாற் கிடைத்தன. அச்சமயத்தில் என் பதிப்பும் வெளிவந்து அவரைத் தூண்டிற்று. அதனால் அவர் இரண்டாவதாராய்ச்சி வெளியிட்டார்.

அவ்விரண்டாவதாராய்ச்சி முற்றும் என் பதிப்பைக் குறைகூறுவதற்காக எழுந்ததென்பது அதனைப் படிப்பவர்க்கெல்லாம் இனிது விளங்கும். அங்ஙனங் குறைகூறுதல் தகாதென்று, தக்க காரணங்களுங் கூறிக் 'கலிங்கத்துப்பரணி யாராய்ச்சியைப் பற்றிய சில குறிப்புக்கள்' என்றதொரு கட்டுரை யெழுதிச் செந்தமிழ் உ௯-ஆம் தொகுதி ஏழாம்பகுதியில் நான் வெளியிடுவிக்க, ஆராய்ச்சியாளர் அவ்வளவிலமையாது 'கலிங்கத்துப்பரணி யாராய்ச்சிச் சங்கோத்தரம்' என்றொன்றெழுதி அத்தொகுதி ஒன்பதாம் பகுதியில் வெளியிடுவித்தனர். அப்பாற் செந்தமிழ்ப் பத்திரிகை இத்தகைய கட்டுரைகளை யேலாதாயிற்று. அதன்மேல், நான் 'கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி மறுப்பு' என்றொன்றெழுதித் 'தமிழ்ப் பொழில்.' ௭-௮, ஆம் மலர்களிலே வெளியிடுவித்தேன். அதற்கும் ஆராய்ச்சியாளர் மறுப்பொன்றெழுதித் 'தமிழ்ப் பொழில்' ௯-ஆம் மலரில் வெளியிடுவித்திருக்கின்றனர். இம் மறுப்புக்கும் 'கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி' என்றே பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்; நான் இதனை மூன்றாவதாராய்ச்சி யென்று கூறினேன்.

இம்மூன்றாவதாராய்ச்சியின் முதலில், "எழுதூளியடங்க நடந்து" என்னும் 349 ம் தாழிசையை யெடுத்துக்கொண்டு, அதற்குத் தாங்கொண்ட பொருளை யிடரின்றி முடித்துக்காட்டிவிட்டதாகக் கூறுகிறார். அத்தாழிசையின் முதல்அடியில் 'ஏகுந்திசை 'கண்டு அது' என்று தாம் பிரிக்கவில்லையாம்; 'கண்டது' என்று ஒரே சொல்லாய் வைத்து, வினையாலணையும் பெயரெனக்கொண்டு அதனைக் கடற்படையுடன் இயைத்தாராம். இதுவே அச்சொல்லுக்கு முதற்படி. அடுத்தபடியில் அது 'கண்ட' என்றாகி, மூன்றாம்படியில் 'கண்டு' என்றாயிற்றாம். இத்தாழிசையிலே, நடந்துகண்ட கடற்படை எனப் புலவர் பாடினாராம். இப்படியாகப் பலவும் எழுதிச் செல்லுகின்றார். இத்தனைக்கும் இலக்கணவிதி இடங்கொடுக்குமோ என்னும் வினாவினையும் மற்றுஞ் சில வினாக்களையும் இனி நான் எழுப்பின், அவற்றிற்கெல்லாம் அவர் யாவேனும் விடையாக எழுத முற்படுவாரென்பது திண்ணம். அங்ஙனம் செய்யின், நாங்கள் இருவரும் சேர்ந்து இனியும் தமிழ்ப் பத்திரிகைகளின் அருமையான பக்கங்களை எங்கட்கே உரிமையாக்கிக் கொள்வதாக முடியும்.

ஆதலால், 'செந்தமிழ்' 'தமிழ்ப் பொழில்' என்னும் பத்திரிகைகளின் ஆசிரியர்களேனும், மற்றுமுள்ள செந்தமிழ்ப் புலவராம் பெருந்தகையாளருள் ஒருவரேனும் எங்கள் இருவர் வாதங்களையும் ஆதிமுதல் உற்றுநோக்கி யாராய்ந்து, உண்மையை எடுத்து விளக்கி எங்களைத் தெளிவிப்பீர்களாக.

பண்டிதர், அ. கோபாலையர்.

குறிப்பு:–

இக் கலிங்கத்துப்பரணிப் பொருட் போரில் தலையிட்டு நிற்கும் இருபுலவர்களின் நுண்பொருளுரைகளை ஆராய்ந்து துணிபு காண்டல் எம்போல்வார்க்கு எளிதன்றெனினும், இங்ஙனம் நினையாது முன்வந்து நிற்கும் 'அன்பர்களின் கட்டளை' களை நெகிழ்த்தல் அதனினுங்காட்டில் எளிதன்றாகலின், எமக்குத் தோன்றுஞ் சில குறிப்புக்களை–தக்கார் எவரும் எழுதாதுவிடின்– பின்னர்க் குறிப்பேம்.

இதழாசிரியர்.

—

தமிழ்த்தாய் வாழ்க.

புகழுடம்பு பெற்றவர்.

(சாமி. சிதம்பரன் எழுதியது.)

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று." (பொய்யாமொழி)

இவ்வுலகில் எவ்வளவோ மக்கள் பிறக்கின்றனர், இருக்கின்றனர், இறக்கின்றனர். பண்டைநாளில் உறைந்தவர் பலராயினும் சிலர் பெயரையும் வரலாறுகளையுமே யாம் இஞ்ஞான்று கேள்வியுறுகின்றோம். அவர்களிற் புலவர்களைப் புரந்து வந்தமையால் புகழ்பெற்றவர் சிலர். பல அறநிலையங்களை ஏற்படுத்தினமையாற் புகழ்பெற்றவர்சிலர். வலிய கருங்கற்களாற் கோயில்கள் கட்டினமையாற் புகழ்பெற்றவர் சிலர். வீரச்செய்கைகள் செய்தமையாற் புகழ்பெற்றவர் சிலர். இங்ஙனமே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மனநிலைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற செயல்களைச் செய்து புகழுடம்பு பெற்றனர். உலக மக்களிற் பெரும்பாலார்,

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றின்
நடுவண(து) எய்த இருதலையும் எய்தும்" என்றபடி,

நிலைபெற்ற அறங்களைச்செய்து புகழெய்துதற்குப் பொருட்டாயிருப்பது பொருள் ஒன்றே என்று கருதியிருக்கின்றனர். ஒருவகையில் இஃது உண்மையே யாயினும் வேறு வகையினாலும் உலகமுள்ள அளவும் அழியாப்புகழை நிலைநிறுத்த முடியும் என்பதை மறுக்கவொண்ணாது.

இவ்வுலகில் ஆக்கப்பொருளால் அன்றி ஊக்கப்பொருளால் பெரும் செயல்களைச்செய்து அழியாத புகழ்பெற்றவர்கள் உளர். அவர்கள் **புலவர்கள்** என்று கூறப்படுவார்கள். யாம் ஈண்டுத் தமிழ்ப் புலவர்களை மட்டும் குறிப்பிடவில்லை. எல்லா நாட்டுப் புலவர்களையும், எல்லா மொழிப் புலவர்களையும், எல்லாமதப் புலவர்களையும் புகழை நிலைநிறுத்திப் புகழுடம்பு பெற்ற பெரியார்கள் என்று கூறுகின்றோம். "கலைமகள் தனது நாவிலேயே இடைவிடாது உறைவாளாயினும், நர்ன்முகன், சிறந்த தமிழ்ப்

புலவர்க்கு ஒப்பாக மாட்டான்; ஏனெனில், மலரவனால் செய்யப்படும் உடம்புகளெல்லாம் சிலகாலம் நிலைத்திருந்து பின்னர் அழிந்தொழிகின்றன; ஆனால் புலவர்களால் செய்யப்படுகின்ற பாடல்களாகிய உடம்புகளோ, மேலும் மேலும் புகழ்பெற்று அழியாமல் நின்று நிலவுகின்றன" என்று ஒரு பெரியார் கூறிய உண்மையை நுணுகியறிவார்க்குப் புலவர் பெருமை விளங்காமற் போகாது. அதனை

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு

என்பதனால் அறியலாம். ஆகவே இப்பாடல் இயற்றியவரின் கருத்து, "உலகைப்படைக்கும் கடவுள் என்று கூறப்படும் நான்முகனைவிடப் புலவர்கள் சிறந்தவர்கள்" என்பதாகும்.

இற்றைநாளில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த புலவர் சிலர் பெயர்களைக் கேட்கின்றோம். அவர்கள், பிறப்பிடம், காலம், மதம் முதலிய வரலாறுகளை ஆராய்ந்து இன்புறுகின்றோம். **ஆசிரியர் தொல்காப்பியரைப்**பற்றி நாம் உரையாடுவதற்கும், அவரைக் கொண்டாடுவதற்கும் பொருட்டாயிருப்பது அவர் செய்த அழியா முழுமணியென்று கூறத்தக்க **தொல்காப்பியம்** ஒன்றேயன்றோ? அத்தமிழ்மறை இல்லாவிடில், "நாம் ஆரிய வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டிருப்போம்" என்பதனை மறுக்கும் அறிஞர்இலர் என்று எண்ணுகின்றேம். இஞ்ஞான்று அந்நூலின்றேல், நமது பண்டைய உயரிய மதக்கொள்கைகளை எவ்வாறு அறிய வியலும்? நமது அரசியல் முறையை எவ்வாறு அறிய வியலும்? நமது வாழ்க்கை முறையை எவ்வாறு அறிய முடியும்? அத்தொல்காப்பியமே அதன் ஆசிரியரின் புகழுடம்பாகும். இனி, இஞ்ஞான்றும் **திருவள்ளுவர்** மதத்தைப் பற்றியும், அவர் வரலாற்றைப்பற்றியும் பலர் பலவாறான கொள்கையுடன் போரிட்டுக் கொண்டிருக்கின்றனர். திருவள்ளுவரை நான்முகன் பிறப்பென்று சிலர் கூறுகின்றனர். அவர் தலையில் சிற்சில தெய்வச்செயல்களையும் கட்டிவைத்துக் கதை கூறுகின்றனர் சிலர். இவற்றிற்கெல்லாம்

காரணமாயிருப்பது அவர் செய்த திருக்குறள் ஒன்றேயன்றோ? இங்ஙனமே ஒவ்வொரு புலவரைப்பற்றியும் கூறுவோமாயின் மிக விரியும். ஆதலால் மற்றொரு சிறந்த புலவரின் புகழுடம்பை எடுத்துக்காட்டி இக்கட்டுரையை முடிப்போம்.

கடைச்சங்ககாலத்தில் இறையனார் என்னும் பெயருடைய சிறந்த புலவர் ஒருவர் இருந்தார் என்பதும், அவரால் செய்யப்பட்ட நூலுக்கே இறையனார் அகப்பொருள் என்று பெயரென்பதும் பலர் அறிந்ததாகும். அந்நூலுக்குக் கடைச்சங்கப் புலவர்களில் ஒருவராகிய நக்கீரனாரே பொருள் கூறினாரென்றால் அதன் பெருமையை நம்மால் அளவிட முடியுமா? அவ்விறையனாரால் பாடப்பெற்ற தனிப்பாடல் ஒன்று குறிப்பிடத்தகுந்த பெருமையுடையதாகும். அப்பாடல் குறுந்தொகையில் இரண்டாம் பாடலாக வைக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும் அப்பாடலைப் பலவிடங்களிலும் பயின்றுவரக் காணலாம். அப்பாடல்

> கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
> காமம் செப்பாது கண்டது மொழிமோ!
> பயிலியது கெழீஇய நட்பின் மயில்இயல்
> செறியெயிற் (று) அரிவை கூந்தலின்
> நறியவும் உளவோ? நீஅறியும் பூவே!"

என்பதாகும். இதன்பொருள்:-மலர்களில் உள்ள தேனை ஆராய்ந்து அருந்தும் வாழ்க்கையினையும், அழகிய சிறகையும் உடைய தும்பியே! என்பாற் கொண்ட அன்பாற் கூறாமல் உண்மையாகக் கண்டதையே கூறுக. உனக்குத் தெரிந்த மலர்களுக்குள், நெருக்கம் பொருந்திய நட்பினையும், மயிலின் தன்மையினையும், நெருங்கிய பல்லினையும் உடைய இப்பெண்ணின் கூந்தலைவிட மணம்பொருந்திய மலர்கள் இருக்கின்றனவா? என்பதாகும்.

இப்பாடல், ஒரு தலைமகன் தலைமகளது நலத்தைப் பாராட்டிக் கூறியதுபோற் பாடப்பட்ட துறைப் பாட்டாகும். இப்பாடலில் உள்ள சொற்போக்கும், பொருட்போக்கும், நடையின் பெருமிதமும் நம் மனத்தை அதன்வழியில் ஈர்த்துச் செல்கின்றதன்றோ? இப்பாடலால் தும்பியின் இயற்கையை அறிகின்றோம்.

அன்றியும், ஒரு சார்புபற்றிப் பேசாமல் உண்மையைப் பேச வேண்டும் என்றும், தலைவனும் தலைவியும் மனம் ஒருமித்து வாழ்வதே சிறந்த வாழ்க்கையாகும் என்றும் அறிகின்றோம். அன்றியும் இவ்வொருபாடலே நக்கீரனார்க்கும், இறையனாருக்கும் சொற்போருண்டாகுமாறு செய்ததாயின் இதன் பெருமையென்னே! இப்பாட்டலே திருவிளையாடற் புராணத்தில் உள்ள, தருமிக்குப் பொற்கிழியளித்த படலம். கீரனைக் கரையேற்றிய படலம். கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தபடலம் ஆகிய மூன்றுகதைகளை *உண்டாக்கிய ஆற்றல்படைத்ததாயின் இதன் பெருமையை என்னென்று கூறுவது? இப்பாடலை இயற்றிய இறையனார் போன்ற புலவர்கள் புகழுடம்பு பெற்றவர்களாவார்கள்.

இக்காலத்திலும் புலவர்கள் பண்டைக்காலத்தைப்போல் பாட்டுப்பாடிப் புகழ்பெற வேண்டுமென்பது எமது கருத்தன்று. அக்காலநிலை வேறு. இக்காலநிலை வேறு. ஆதலால் இக்காலத்து மக்கள் நிலைமைக் கேற்றவாறு சிறந்த உரைநடை நூல்கள் எழுதிப் புகழ்பெற வேண்டும் என்பதே எமது கருத்தாகும். ஆயினும் பாட்டியற்றுதலே கூடாதென்பதும் எமது கருத்தன்று. இக்காலத்தில் மக்கள் விரும்பும் நிலையில் புதிய பாடல்களால் உயரிய பொருள்களை எளிதில் அறியுமாறு பாடல்கள் பாடுவது நலமாகும் என்பது-அறிஞர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய-எமது கருத்தாகும். ஆதலால் நமது நாட்டுத் தமிழ்ப்பெரும் புலவர்களை இனியேனும் இம்முயற்சியிலீடுபடுமாறு வேண்டுகின்றேம்.

> பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையினானே.

---

* கட்டுரைகளின் கருத்துக்கள் கட்டுரை எழுதுவார்க்கே உரியன; பொழிற் கருத்தெனக் கூறற்காகா.

ஓரி.

இவன் மழவர் குடியிற் றோன்றிய பெருந்தகை என்பது

‘வெம்போர்–மழவர் பெருமகன் மாவள் ளோரி
கைவள மியைவ தாயினும்
ஐதே கம்ம வியைந்துசெய் பொருளே’

என்ற நற்றிணைப் பாடலால் அறியப்படுகின்றது. இவனை **ஆதனோரி** எனவும் **வல்வில்லோரி** என்வும் கூறுவர். கடைச்சங்க நாளில் நிலவிய கடையெழுவள்ளல்களில் இவனும் ஒருவன் என்பது ‘முரசுகடிப்பிகுப்பவும்’ என்னும் 158-ஆம் புறப்பாட்டானும் சிறுபாணாற்றுப் படையானும் நன்கு விளங்குகின்றது. இவன் கொல்லிமலையையும் அதனைச்சூழ்ந்த நாட்டையும் ஆண்டவன். இதனை,

‘ஓரி–பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லி (அகம் 208)

எனவும்,

‘வல்வில் லோரி கொல்லிக்குடவரை’ (குறுந்தொகை 100)

எனவும்,

‘கொல்லி யாண்ட வல்வில் லோரியும்’ (புறம் 158) எனவும் போதரும் சங்கத்துச் சான்றோர் பாடல்களால் அறியலாம். இக் கொல்லிமலை, தேன், பழம் முதலாய உணவுப் பொருள்களும், இடையறாது நீரொழுகும் பல இனிய அருவிகளும் உடையது. கொல்லிக் கூற்றத்தில் யானைகள் மிகுந்திருந்தமையின் இவன் யானைத் தந்தங்கள் விற்று அதனாலும் பெரும்பொருள் ஈட்டி வந்தனனென்பது,

‘கருங்கண் வேழத்துக் கோடுநொடுத் துண்ணும்
வல்வி லோரிக் கொல்லிக் குடவரை’

என்னுங் குறுந் தொகைப் பாடலால் அறியக்கிடக்கின்றது. இத்தகைய நாட்டிற்குத் தலைவனாக விளங்கிய நமது மழவர் பெருமானும் வருவாய் மிக்குடையவனாய் இரவலர்க்கு வரையாது கொடுக்கும் வண்மையனாய் இனிதுவாழ்ந்துவந்தனன். இவனது வள்ளன்மையை,

‘மாரி வண்மகிழ் ஓரி’ (நற்றிணை 265) எனவும்,

‘மாவள்ளோரி
கைவள மியைவ தாயினு மைதே கம்ம’ (ஷ 52)

எனவும், அந்நாளில் விளங்கிய செந்தமிழ்ப் புலவர்களாகிய கபிலரும் பரணரும் புகழ்ந்து கூறியுள்ளனர். இவ்வள்ளல் தன்பால் எய்திய புலவர்கட்கும் இரவலர்கட்கும் யானையும் பொன்னும் மணியும் மிகுதியாக அளித்துவந்தனன். இதனை,

‘தன்மலைப் பிறந்த தாவி னன்பொன்
பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்மெனச்
சுரத்திடை நல்கி யோனே விடர்ச்சிமை
யோங்கிருங் கொல்லிப் பொருந
னோம்பா வீகை விறல்வெய் யோனே’ (புறம் 152)

‘இழையணி யானை யிரப்போர்க் கீயும்
சுடர்விடு பசும்பூட் சூர்ப்பமை முன்கை
யடுபோ ரானா வாத னோரி’ (புறம் 153)

என்னும் பாடல்களால் நன்குணரலாம். அன்றியும் ‘தன்மலைப் பிறந்த தாவி னன்பொன்’ என்பது அக்காலத்தே கொல்லிமலையிலிருந்து பொன் எடுக்கப்பெற்ற செய்தியை விளக்குதல் காண்க.

இவ்வள்ளல்பாற்சென்று ‘நீரின்கண் பூவாதமணி மிடைந்த குவளைப்பூவை வெள்ளிநாராற் றொடுக்கப்பெற்ற பொன்னரிமாலையினையும் பிறவணிகலன்களையும் யானையணிகளுடனே பெற்றுத் திரும்பினோர், பொருள்வருவாய்க் குரியவையாய்த் தமக்குஇன்றியமையாதனவாயிருந்துள்ள தொழில்களையும் மறந்தொழிந்தனர்’ என்று இவனது பெருங்கொடைத் திறத்தைப் பெரிதும் பாராட்டிக் கூறியுள்ளார் வன்பரணர் என்னும் புலவர் பெருந்தகையார்.

இம்மழவர் கோமான், இங்ஙனம் பல்லாற்றானும் பெருமையுற்று வாழ்ந்துவரும் நாட்களில் கொல்லிக் கூற்றத்தின் பக்கத்துள்ள தகடூரில் வீற்றிருந்து அதனைச் சூழ்ந்துள்ள நாட்டை ஆட்சிபுரிந்துவந்த அதிகமான் நெடுமானஞ்சி என்பான் மலையமானாட்டின்மீது படையெடுத்துச்சென்று, அதனைக் கைப்பற்றிக் கொண்டு அந்நாட்டரசனாகிய மலையமான் திருமுடிக்காரியைத்

திருக்கோவலூரினின்றும் துரத்திவிட்டனன். திருமுடிக் காரியோ மூவேந்தருக்கும் படைத்துணைமைபூண்டு உற்றுழியுதவி ஒரு காலத்தில் பெரும்புகழ் எய்தியவன். ஆதலால் மேற்கடற் கரையோரத்துள்ள தொண்டி என்னும் பட்டினத்திலிருந்து அரசாண்டுவந்த 'செல்வக்கடுங்கோவாழியாத' னது புதல்வனாகிய பெருஞ்சேரலிரும்பொறை யிடஞ்சென்று தனக்கு அதிகமானால் நேர்ந்த இன்னலை அறிவித்து அவற்றைப்போக்குமாறு வேண்டினன். அதனைக் கேட்ட சேரமன்னன் காரியின் நிலைமைக்குப் பெரிதும் இரக்கமுற்று அதிகமானைப் போரிற்புறங்கண்டு அவன் கவர்ந்துள்ள நாட்டைத் திரும்பக் கைப்பற்றி அதனைக் காரிக்கு அளிப்பதாக உறுதிகூறினன்; அன்றியும் அதிகமானோடு போர் தொடங்குமுன்னர் அவனது தாயத்தானாகிய ஓரியோடு பொருது அவனது கொல்லிக் கூற்றத்தைக் கைப்பற்றிக்கொள்வது இன்றியமையாததென்று அச்சேரமான் கருதினான். அதனை யறிந்த திருமுடிக்காரி சேரமானது படையுடன் வஞ்சி சூடி ஓரியினது கொல்லிமலைக்குச் சென்றனன். காரிக்கும் ஓரிக்கும் கொல்லி மலையின் பக்கலில் பெரும்போர் நடைபெற்றது. இரவலர்கட்கு இனியனாய் அன்னார் வேண்டிய வேண்டியாங்கு அளித்துவந்த பெருங்கொடைவள்ளலாகிய ஓரி, அப்போரில் இம்மண்ணுலகை நீத்து ஈவாருங் கொள்வாருமில்லாத வானுலகம் எய்தினான். இச்செய்தி,

'குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை யோரியும்'

என்ற சிறுபாணாற்றுப் படையடிகளானும்,

'ஓரிக் கொன்ற வொருபெருந் தெருவிற்
காரி புக்க நேரார் புலம்போற்
கல்லென் றன்றா லூரே'

என்ற நற்றிணைப்பாடலானும்,

'முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
லோரிக் கொன்று சேரலற் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி'

என்ற அகப்பாட்டானும்

இனிது அறியப்படுகின்றது. போரில் வாகைமிலைந்த திருமுடிக் காரி மிக்க ஆரவாரத்தோடு ஓரியினது நகரத்துட்புகுந்து அதனையும் கொல்லிக்கூற்றத்தையும் கைப்பற்றிக்கொண்டான். பின்னர், அவன், அந்நாட்டைச் சேரமானுக்கு அளித்துவிட்டமையின், அது பெருஞ்சேரலிரும்பொறைக்கு உரியதாயிற்று. செந்தமிழ்ப் புலவர்களும் கொல்லிமலையைப் பொறையன் கொல்லி யென்றே வழங்குவாராயினர். இதனை,

'இரவலர் மெலியா தேறும் பொறையன்
உரைசா லுயர்வரைக் கொல்லிக் குடவயின்'
(நற்றிணை 185) எனவும்,

'துன்னருந் துப்பின் வென்வேல் வானவன்
இகலிருங் கானத்துக் கொல்லி போல'
(அகம் 338) எனவும்,

'மறமிகு தானைப் பசும்பூட் பொறையன் கொல்லி'
(அகம் 303) எனவும்,

'வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை'
(அகம் 213) எனவும் போதரும்,

நல்லிசைப் புலவர்களது பாடல்களால் உணர்க. இரவலர்கட் கீந்து அதனால் இசைபட வாழ்ந்த நமது வள்ளலது பெருவாழ்வும் நல்லறிஞர் பலரும் இரங்கி வருந்துமாறு இங்ஙனம் முடிவெய்தியது. ஊழின் வலியை இந்நிலவுலகத்து யாவர்தாம் கடத்தல் கூடும்?

இனி, இவனது கொல்லிமலையில் அமைக்கப்பெற்றிருந்த கொல்லிப் பாவையைப்பற்றிய செய்திகளையும் ஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமுடையதேயாகும். செந்தமிழ்ப் புலவர்கள் அழகிற் சிறந்த பெண்டிர்களுக்கு இப்பாவையை உவமானமாகக் கொண்டு 'கொல்லியம்பாவையன்னாய்' என்று குறிப்பிடுதல் பெருவழக்காயுள்ளமையின், இது பேரழகு வாய்ந்ததொரு பாவையாயிருத்தல் வேண்டும். இது கண்டார் உள்ளமும் விழியுங் கவர்ந்து காமவேட்கைவருவித்து இறுதியிற் கொல்லத்தக்க தாகக் கடவுளாலேயே அமைக்கப்பெற்ற ஒரு மோகினிப்படிமம் என்று கூறுகின்றனர். இப்பாவை, கடவுளால் காக்கப்படுவதென்பதும், காற்று, மழை, இடி முதலிய இடையூறுகளால் தன்

உருக்கெடாமல் என்றும் தன் இயல்பு குன்றாதிருப்பது என்பதும்,

'கொல்லித்
தெய்வங் காக்குந் தீதுதீர் நெடுங்கோட்
டவ்வெள் ளருவிக் குடவரை யகத்துக்
கால்பொரு திடிப்பினுங் கதழுறை கடுகினு
முருமுடன் றெறியினு மூறுபல தோன்றினும்
பெருநிலங் கிளரினுந் திருநல வுருவின்
மாயா வியற்கைப் பாவை' (நற்றிணை 201)

என்ற பாடலால் நன்கு புலப்படுகின்றன. அன்றியும், 'கொல்லி நிலைபெறு—கடவு ளாக்கிய பலர்புகழ் பாவை' என்னும் அகப் பாட்டானும், (அகம் 209) 'பெரும்பூட் பொறையன் பேள முதிர் கொல்லிக்—கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய—நல்லி யற்பாவை' என்னுங் குறுந்தொகைப் பாடலானும் (குறு—89) 'கொல்லிக் குடவரைப்—பூதம் புணர்த்த புதிதியல் பாவை' என்னும் நற்றிணைப் பாடலானும் (நற் 192) இப்பாவை கடவுளால் ஆக்கப்பட்ட தென்பது தெளிவாம்.

T. V. சதாசிவ பண்டாரத்தார்,

௨

இந்தியத் தாய் தன் மக்கட்கு உரைப்பது.

'பாதிமதியணி' என்பது போன்ற சந்தப் பாட்டுக்கள்.

வானின் இடம்அற மேவி மறைதரு மாய இருளதை ஒருசேர
மாந்தி எழுபகல் வேந்தின் ஒளிதரு காந்தி எழுந்தது எழுவீரே!
ஞான மதனோடு மேனி அருளிய நாதன் இணையடி தொழுவீரே!
ஞாயி றெழுதரு காலை உமதுநற் றாயின் நலஞ்சிறி தறிவீரே!
ஏணி இதுதனால் வானின் அடைதர லாகும் எனும் இம
மலைபாரீர்!
ஏய குணகுட பாலொ டழ்குதென் னாடும் வளைதரு கடல்பாரீர்!
ஆன இவைஅரண் ஆக உடையநம் தாயை நிகர்வதோர் திருநாடு
ஆகும் அவனிஎப் பாலும் உள தெனில் ஆய அதனைநீர்
அறைவீரே!(௧)

பாயும் ஒலியுடை நீரின் வீழ்வு, தென் காலின் இனிதுறு
மலைபாரீர்!
பாலில் நறுநெயில் தேனில் மிகுசுவை பாயுந் தமிழ் முதல்
மொழிபாரீர்!
தூய கங்கையந் தாய்கோ தாவிரி தோமில் காவிரி யதனோடு
தூவு பொருனைமுன் னாய நதிபல பாயும் நிலவளம் அதுபாரீர்!
மேய வெள்ளிபொன் னோடி ரும்புமண் ணூடு கரிமுதற்
புதைபாரீர்!
மேவு பலவகைக் கானின் வளமொடு வேலை தருவளம் பலபாரீர்!
ஆய மகவினர் வாழ்வு தனக்குள தாகு பொருளினில் எதுதானே
ஆகும் எனதிடை நாடின்இல தெனத் தேடி மொழிகுவிர்
மகவீரே! (௨)

மேலை யதனிலோர் காலம், உயருவே ளாளர் குடியென
நுவல்வோர்கள்
வேராய் உலகினுக் காவி பொருள் உடல் ஈயும் அருமையர்
பலகோடி!
வேலை மரக்கல னோடு தரையினில் மேவு வழியெலாம்
பொருள்தேடி
வேண திருவெலாம் நாளும் நிறைதர மேய வணிகர்கள்
பலகோடி!
காலன் வருகினும் ஓடல் அறிகிலா வீர யாளிகள் பலகோடி!
காணும் அவரெனை? வீர நலமுள தாயர் தாமுமே ஒருகோடி!
ஞால மிசையறி யாமை குடிகொளு நாளும் இதனிடைக் கலைசூடி
நாடு புலவர்கள் கோடி பல! இனி நாட லுறுவன சிலகேளீர்! (௩)

வேறு வேறெனும் சாதி மாமத வேலை மேவினும் இடைமேவும்
வேறு பாடறத் தாயர் இந்தியத் தேவி யாம்என
உணர்வீரே!
ஆரும் ஆங்கில ராக ஏனையர் ஆக யாவரே அவரேனும்
ஆய என்னிடைத் தாயின் அன்பது மேவு வோர்கள்என்
மகவோரே!
ஓரும் ஓரிடம் மேவி யோர்கள் ஓர் தாயர் சேயென இணையாரேல்
ஓதும் ஞாலமெப்பேறு மேவலோர் காலு மில்லையென்றறிவீரே!

பாரில் யாவரும் தாயர் நாடது பீடு மேவுறப் படுபாடு
பார்மின் ! பார்மினோ ! பாலர் காள்நிவிர் வாழ்விர் ! வாழ்விர்கள் !
பலவூழி ! (ச)

நாளும் எய்தரு ஊணும் ஆடையும் நாடித் தாய்நலம் நினையீரேல்
நாடு யாவும்நும் பீடில் ஏழைமை காண நாணம தடையீரோ !
சூழுங் கோழையும் சோர்வும் பேதமும் சூதும் யாவையும்
விடுவீரே !
தூய கைத்தொழி லோடு தொன்முறை யாய கல்வியை
அடைவீரே !
ஆளும் ஆங்கிலர் வாழ்வு யாமுற லாகும் வாழ்வென அறிவீரே !
ஆய அன்னவர் நீடு செய்தன பேரு தவிகள் மறவீரே !
நீள நீர்நினை வாழ்வும் ஆங்கிலர் நேய மேதரப் பெறுவீரே !
நீடும் ஊழிகள் வாழி ! வாழியர் ! நேரி லாதவென் மகவோரே !!
(ரு)

இது, திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்களால் எழுதப் பட்டது; கல்வித்துறையாளர் காட்சிப் பரிசு பெற்றது.

T. V. இரத்தனசாமி.

உ

சங்க காலத்துச் சோழவரசர் பரம்பரை.

(96 ம் பக்கத் தொடர்ச்சி.)

பெருநற்கிள்ளிக்குப்பின்னே தோன்றியவன் கரிகாலனெனத்திருவாலங்காட்டுப் பட்டையம் கூறுவதாலும், உதையேந்திரத்துச் செப்புப் பட்டையமும் கோக்கிள்ளிச் சோழன் பின்னோன் கரிகாலனென்பதாலும், இராசசூயம் செய்திருப்பதாலும், கரிகாலன் காலமுதற் கொண்டே சோழ அரசாட்சியிற் கலக முண்டென்ப தொருதலை யாகையான் அவர்க்குப் பின்வந்தார் இராசசூயம் செய்தல் இயலாத காரிய மாகலானும், கரிகாலனுக்கு முன்றுன் இராசசூயம் வேட்டான் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றுகொள்ள வேண்டியிருக்கிறது. இவ்விராசசூயம் வேட்டானோடு உடனா

சாவார் கவியங்கேறிய பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. ஆகவே பின்னெழுந்த திருவாலங்காட்டுப் பட்டயம் கூறுவதே பொருத்த முடையதாகிறது.

அன்றியும் 'லீடன் கிராண்ட்' என்னும் ஆனைமங்கலத்துப் பட்டையமும் முரணுமாறில்லை என்பது விளங்கும். அதிற் கண்ட கரிகாலன், கோச்செங்கண்ணன், கிள்ளிவளவன் என்ற முறையே புறநானூற்று வைப்பு முறைக்கு ஒற்றுமையுடையதாக காண்கிறது. கலிங்கத்துப்பரணியிலே 'தளவழிக்கு நகையாளி இழிபிலத்தின் வழியே சென்று தனிநடந்து உரகர் தங்கண் மணிகொண்டவவன்' என்று காணப்படுகிறது. பாகவத புராணத்திலே சூரியவமிசத்து அரச பரம்பரையைக் கூறும் போது மாந்தாதாவின் மகனை புருகுச்சன் என்பான் பாதாளவுலகஞ் சென்று நாககன்னிகையை மணந்து வாழ்ந்தானென்று காண்கிறது. ஆகவே நாககன்னிகையான பீலிவளையை மணந்த கிள்ளிவளவன் வேறு, அவன் கரிகாலனுக்குப் பிற்பட்டவனென்பதும், பரணியிற் கண்டவன் மிகு மிகு முற்பட்டவனென்பதும் பெருகின்றும்.

மேலும், விக்கிரம சோழனுலாவிலும் இக்கூற்றை வலியுறுத்த 'ஆங்குப்–பிலமதனிற் புக்குத் தன்பே ரொளியால் நாகர்குல மகளைக் கைபிடித்த கோவும்' என்று பிருகுச்சனையே குறிக்கிறது என்பதற்குச் சான்றாகப் பின்வரும் அடியான 'உலகறியக் காக்குஞ் சிறுபுறவுக்காகக் களிகூர்ந்து–தூக்குந் துலைபுக்க தூயோனும்' என்பது நின்று வலியுறுத்துகிறது. இவ்வுலாவிற் கரிகாலனையும், செங்கணானையுமே ௰௬, ௰௪-வதுகண்ணிகளிற் குறிப்பிடப்பட்டுளது.

ஆகவே மேற்காட்டியவற்றால் ஒன்றற்கொன்று முரணுடைய கொள்கையினவன்று என்பது வலியுறும். இவைகளேயன்றிக் கன்னியாகுமரியிலுள்ள கல்வெட்டிலும் பெருநற்கிள்ளி கரிகாலனுக்கு முன்னவனென்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வைகளினாலே இவ்வுரை நடையிற்கண்ட கூற்றுக்கள் மறுக்கப்படும் வரையிற் பின்வரும் வமிசாவளியைக் கோள்ளலாம்.



இலக்கணவிளக்க வாசிரியர் பரம்பரை,
திரு. சோமசுந்தரதேசிகன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
207291
சென்னை-600 008

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

முன்பணம்.

	உள்நாடு			வெளிநாடு		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை
...யுள் வரி	௫	०	०	௨௫	०	०
...ண்டு வரி						
உறுப்பினருக்கும் ...ள்ளிக்கூட மாணவர் ...ட்கும்	௨	०	०	௨	அ	०
...னையர்க்கு	௩	०	०	௩	அ	०
...னி மலர்	०	௪	०	०	௪	०

இதழாசிரியர், தமிழ்ப் பொழில்.
கரந்திட்டைக்குடி, தஞ்சாவூர்.
(Karantatangudi, TANJORE.)

சங்கத்தே பெறலாகும் அரிய நூல்கள் சில.

...தால்காப்பியம், சொல்லதிகாரம், பேராசிரியம், (க. த. ச. பதிப்பு) ...ழக் காலிகோ கட்டுவேலை.	...2–8–0		
...ந்த முலாம் எழுத்துக்களையுடைய உயர்ந்த ...டுவேலை	...3–8–0		
...ல்காப்பியம். பொதுப்பாயிரம் உரையுடன்	0	1	0
...ற்றிரட்டு, (வ. உ. சிதம்பரம்பிள்ளை)	0	8	0
...மே புறம். „	0	8	0
...ளியம்மை சரித்திரம்—ஓர் உண்மை வரலாறு.	0	8	0
...கவதி. ஓர் இனியநாவல் (பண்டித பாலாம்மாள்)	1	0	0
...மணி.	1	0	0
...chinopoly rock and its illumination with illustrations.	0	5	0
...Subramaniya Iyer-His life.	0	4	0
...gavad Githa in Sanscrit with an English Introduction	0	5	0
...richandra-A drama.	1	0	0
...rist is a Myth.	1	0	0
...dia in transition	0	4	0
...Karanthai Tamil Sangam Rules.	0	2	0
...சுதேச வைத்திய ரத்தினம்	3	0	0
...நமது சிறிய சத்துருக்கள்	0	4	0

சங்கத்தே பெறலாகும் அரிய நூல்கள் சில

தொல்காப்பியம். எழுத்து: நச்சினார்க்கினியம். 4-(
தொல்காப்பியம். சொல். சேனாவரையம். 3-
நன்னூல் மூலம். (பாக்கட்) திருத்தமானபதிப்ப 0-
ஐந்திலக்கணம்: பகுதி. க. திருத்தமானஉயர்ந்தபதிப் 0-1
திருக்குறள் மூலம் (பாக்கட்) சாதாரண பதிப்பு. 0-
திருக்குறள் மூலம். (பாக்கட்) உயர்ந்த பதிப்பு. 1-
திருவாசகம் மூலம். ஷை சாதாரண பதிப்பு 1-
ஷை (உயர்ந்தபதிப்பு) 3-
குமரகுருபரர் பிரபந்தம். கண்ணைக்கவரும் வண்ணம் கட்டடம் செய்யப்பட்டது. அரும்பொருள்விளக்கத் துடன் கூடியது. 3-
நானூற்பது உரையுடன் (இனியவை, இன்னா, கார், களவழி) 1-
நளவெண்பா. அரும்பொருள் விளக்கத்துடன்
மனுமுறைகண்ட வாசகம். அழகிய கட்டடம். உயர்ந்த பதிப்பு. 0-
உதயணன் சரிதம். (மு. கதிரேசச் செட்டியார்) 0-
நக்கீரர் (ந. மு. வேங்கடசாமி நாட்டார்) 0
கபிலர் ” 1

உபந்நியாசங்கள்.
சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்
சூதசம்ஹிதை: தமிழ் மொழிபெயர்ப்பு.
இந்தியரும், இராச சேவையும்.
மெய்யறம்.
மனம் போல வாழ்வு
The Philosophy of action
Sri Sankaran Nair
Tamil Mystic Alphabet (P. V. Manicka Naicker) 1
அன்பானந்தன் 1

திரு. சிவ. குப்புசாமி பிள்ளையவர்கள்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்.